திருவள்ளுவர் ஆண்டு 2044

ஏப்ரல் - 2014

# செந்தமிழ்

திங்கள் இதழ்


தொகுதி : 58
பகுதி : 6

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரைத் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்க் கல்லூரியின் 57வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட ஆட்சியர் திருமிகு. முனைவர். இல. சுப்பிரமணியன் (இ.ஆ.ப) அவர்கள் கலந்து கொண்டார்கள். உடன் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவர் திரு. முத்தையா பசும்பொன் அவர்கள் மற்றும் முதல்வர் முனைவர் மு.மீனா அவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58

பகுதி : 6

ஏப்ரல் : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2044




வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| கம்பர் கவியின் கவின்! | புலவர் சி. பாண்டுரங்கன் | 4 |
| சங்க இலக்கியங்களில் சமயத் தொடர்பான அறச்சிந்தனைகள் | முனைவர். ப. திலீப்குமார் | 15 |
| ஈடிலா இல்லறம்! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 26 |
| உக்கிரப்பெருவழுதி – ஓர் ஆய்வு | வித்துவான் தா. குருசாமி தேசிகர் | 27 |
| வளாகச் செய்திகள் | முனைவர் மு. மீனா | 30 |
| இராமலிங்கரின் உயிர், உறுதிப் பொருள் பற்றிய கருத்தமைவுகள் | பி.ஆர். நரசிம்மன் | 31 |
| இறையனார் அகப்பொருளின் உரை மரபு | மா. சியாமளாதேவி | 36 |

# இதழ் மணம்

அன்புடையீர்!

வணக்கம். தமிழ் மொழி மற்றும் இலக்கண இலக்கியங்கள் இன்பம் தருவன மட்டுமல்ல; பொருளாழமும் கொண்டவை. அத்தகு இயல்பினை வெளிக்காட்டுவதாக இம்மாத இதழ் அமைந்துள்ளது.

கம்பரின் கவிநயம் சிந்திக்க, சிந்திக்க திகட்டா இன்பம் பயப்பது. அத்தகைய கவிநயத்தைப் புலவர் பாண்டுரங்கன் அவர்கள் தானும் நுகர்ந்து நம்மையும் சுவைக்க வைத்துள்ளார்.

சங்ககாலத் தமிழர் வாழ்க்கையில் சமயமும் சமயச் சிந்தனைகளும் செழிப்புற்று இருந்தன என்பதை முனைவர் திலீப்குமார் அவர்கள் ஆய்வுநோக்கில் வெளிப்படுத்தியுள்ளார்.

மதுரைத் தொகை ஆக்கினானும் என்று பாராட்டப்பட்ட உக்கிரப் பெருவழுதியின் தமிழ்ப்பணியைத் தருமையாதீனப் புலவர் குருசாமி தேசிகர் அவர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

இராமலிங்க அடிகளின் மெய்ப்பொருள் சிந்தனையானது, வெளிவுலகில் பரப்பப்பட வேண்டும் என்பதை இராமலிங்கரின் உயிர், உறுதிப் பொருள் பற்றிய கருத்தமைவுகள் என்ற கட்டுரை வலியுறுத்தி சிறப்பாக வெளிக்காட்டியுள்ளது.

அகப்பொருள் இலக்கண நூல்களுள் ஒன்றான இறையனார் அகப்பொருளின் நூற்பாக்கள் குறித்தும், இறையனார்க் களவியலுரையின் மரபுகள் குறித்தும் ஆய்வாளர் சியாமளாதேவி எளிமையான விளக்கத்துடன் கட்டுரை வழங்கியமை பாராட்டிற்குரியது.

தமிழில் பல்துறை சார்ந்த கருத்தமைவுகள் நிலவுவதைப் படித்து பயன் பெறுவோமாக!

**- ஆசிரியர் -**

# கம்பர் கவியின் கவின் !

(சென்ற இதழ் தொடர்ச்சி ...)

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

## எளிய பாடல், அரிய கருத்து, அணிவனப்பு

முன்னர் நாம் பார்த்த வரம்பு எலாம் முத்தம் எனும் தொடக்கப் பாடலில் எலாம் என்னும் சொல் மீண்டும் மீண்டும் அமைந்துள்ளது. பா. அணி.

ஒரு சொல்லோ, தொடரோ பாடலில் சில முறை அமைந்து வேறு பொருள்தரின் சொல் பின்வருநிலை அணி ஆகும். அச் சொல் / தொடர் ஒரே பொருளில் பலமுறை (3-7)வரின், சொல் பொருள் பின்வரு நிலையணி என்னும் அழகு ஆகும்.

நாட்டுப்படலம் ஒன்றனுள் மட்டும் இவ்வணி கொள் பாடல்களின் எண்ணிக்கை, தோராயம் மூன்றில் ஒரு பங்கின் அணித்தாம்.

எலாம், பாய், படுவ, உறங்கும், உண்ட, சிலம்புவ, கொள்வன, கால், சுரக்கும், புடை பெயர்வன, நகுவன, இகலுவ, நிகர்வன, அல்லன, மனையன, சொரிவன, கொள், இல்லை, தாக்குறும், நின்றன போன்ற சொல் / தொடர் ஒரு பாடலில் 3 அல்லது 4 முறை அமைந்து அழகு செய்த வியப்பை உணர, இப்படலத்தின் 61 பாடல்களைப் படித்தல் நன்றாம்; சுமார் 20 பாடல்களில் இவ்வணி மிளிரக் காணலாம். பிற்கால இலக்கியம், சொல் பொருள் பின்வருநிலையணி அமையுறுமாறு 7 தடவை ஒரே சொல் திரும்ப வந்தமைந்தும் புதுமை படைத்துள்ளதை ஒப்பிட்டு மகிழ்க. (வைகலும் ..) மேல் குறித்தவனற்றுள் (எ-டு) பா : 1

## நில வளம்

வள்ளி கொள்பவர் கொள்வன மாமணி,
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி,
புள்ளி கொள்வன பொன்விரி புன்னைகள்,
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே!

- நாட்டுப் படலம், பாடல் எண். 33

## நகரப் படலம்

நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ, மங்கல நாணோ, ஆரமோ, உயிரின் இருக்கையோ, திருமகள் விழை மலரோ, மாயோன் மார்பில் நன்மணிகள் வைத்த பொற்பெட்டியோ, ...என்றவாறு வியக்கத்தக்கதாகவும் விழையத்தக்கதாகவும் உள்ள அயோத்தி நகரைக் கம்பர் அறிமுகம் செய்கின்றார்.

தொடக்கத்தில் கூறிய கருத்துகள், மகாகவி பாரதியார், சுந்தரனார் பாடல் வரிகளை நினைவில் நிறுத்தி இலக்கிய இன்பம் ஊட்டுவன.

### 1. பாரதியார்

பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்!

### 2. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ. சுந்தரனார்

கண்ணில் கலந்து, நெஞ்சில் நிறைந்து, அனைவர் உள்ளங்களிலும் சிம்மாசனமிட்டு அமர்ந்து, தாய்நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று என்னும் உயிரூற்றுகளை வற்றாமல் சுரந்து வளம் செழிக்கச் செய்கின்ற அதி அற்புத அடிகள்! சொல்லச் சொல்ல நாமணக்கும்; நினைக்க நினைக்க நெஞ்சம் இனிக்கும்; மொத்தத்தில் அச்சேறி வந்த அமுத அடிகள்! வாழ்க இந்தியா! வாழ்க தமிழ்!

மேகம் உலவும் மதில், அணிந்து நிற்கும் அகழி, எவரும் நுழைய இயலாத அடர்ந்த இருள் பரப்பும் நிழல் மரம் செறிந்த சோலை, அழகு சிந்தும் வாயில், ஏழடுக்கு மாளிகை எல்லாம் கம்பரின் எழுதுகோல் தூரிகையாக, பனை ஏடு தங்கத் தகடாக, எழில் தமிழ்ப்பாக்கள் ஏழ் வண்ணச் சித்திரங்களாக இராமகாதை எழுகிறது. எ-டு: பா. 2

## பொன்மதில் நீல ஆடை

1. அன்ன நீள் அகன் கிடங்கு சூழ்கிடந்த ஆழியைத்
துன்னி வேறுசூழ் கிடந்த தூங்குவீங்கு இருட்பிழம்பு
என்னலாம் இறும்பு சூழ்கிடந்த சோலை எண்ணில் அப்
பொன்னின் மாமதிட்கு உடுத்த நீலஆடை போலுமே! - பா 21

## பொன்னகர்

2. மின்னென விளக்கென வெயிற்பி ழம்பென
துன்னிய தமனியத் தொழில்த ழைத்தஅக்
கன்னி நல்நகர் நிழல்கது வலால்அரோ,
பொன்னுல காயதப் புலவர் வானமே!

## அணிநயம்

கவிதை பேசும் கண்களோடு சித்திர அழகைப் பார்க்க நேர்ந்தால் நமக்கெல்லாம் என்ன தோன்றும்? கம்பருக்கு என்ன தோன்றியது? அழகிய அணிப்பா தோன்றியது!

பொழுதுணர் வரியஅப் பொருஇல் மாநகர்த்
தொழுதகை மடந்தை யர்சுடர் விளக்கெனப்
பழுதறு மேனியைப் பார்க்குமா கைகொல்
எழுதுசித் திரங்களும் இமைப்பி லாதவே! - பா 50

பொழுதுணர்வரிய மாநகரில் மடந்தையர், விளக்கின் சுடர் போல் விளங்கும் தெய்வத்தைக் கை கூப்பித் தொழும் ( நிலை கண்டு மகிழ் ) ஆசை நிறைவேற எழுதப்பட்ட சித்திரங்கள், இமைக்காமல் திறந்த விழிகளோடு உள - எனப்பொருள் கொள்ளல் சிறந்ததாகும். ஒன்றினும் மேற்பட்ட பொருள் கொள்ள இடம் தரும் கம்பர் கவிதைகள் ஏராளம்!

மாந்தர் மகிழ்ச்சி பொங்க வாழ்வதை, 13 பா வழி விளக்கி, அவர் தம் பொழுதுபோக்கை 4 பா வழி காட்டி, புகழ்த் தொகுதி கூட்டும் நகரமைப்பு 3 பா. கல்வி, செல்வச் சிறப்பு 3 பா என அமைத்து 75ஆம் பாடலில், படலத்தை நிறைவு செய்கிறார்.

நகரில், அகன்ற நீர்நிலைகளில் நீராடும் வசதி, குதிரைச்சவாரி மற்றும் தேரோட்டும் வசதி, குதிரையில் அமர்ந்து பந்தாடும் வசதி, பொழுது போக்காக வனத்தில் பூக்கொய்யும் வசதி உட்பட சுமார் 16 வகையான பொழுது போக்குகள் இருந்தன.

அகன்புனல் ஆடி...
இவுளியொடு இரதம் ஏறவும்...
புரவியில் பொருகில் செண்டு ஆடி...
நந்தன வனத்து அலர் கொய்து...
இவை மட்டுமா?

**கரியொடு கரிஎதிர் பொருத்தி**... என்னும் தொடர், தேன்தமிழ்த் திருக்குறளையன்றோ நினைவூட்டுகின்றது.

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்னைத்
தொன்றுண்டாகச் செய்வான் வினை" - தமிழ் மறை, 758

## மகளிர் நலன்

மகளிர் மட்டும் நீந்தி மகிழ, பல குளங்கள் இருந்ததை, மாதர் ஆடும் குளன் என்னும் தொடரால் குறிக்கின்றார். பழங்காலத்தில் மகளிர் பொருட்டு எவ்வளவோ வசதிகளைச் செய்து தந்து அவர்தம் உரிமை ஓம்பி, சுதந்திரமாக வாழ உதவி செய்த உயர்ந்த சமுதாயம் இருந்தது எனும் சிந்தனை, மகிழ்ச்சி ஒளிரத்தூண்டுகோல் ஆகும்!

## வளம்

கல்விப் பெருக்குண்டு; செல்வச் செழிப்புண்டு;
"தெள்வார் மழையும் திரைஆழி யும்உட்க நாளும்
வள்வார் முரசம் அதிர்மா நகர்வாழும் மாக்கள் -
கள்வார் இலாமைப் பொருள்காவ லுமில்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்க ளுமில்லை மாதோ!
...எல்லாரும் எல்லாப் பெருஞ்செல் வமும்எய் தலாலே,
இல்லா ருமில்லை உடையார் களுமில்லை மாதோ."

என்னே வியப்பு! காவலோ கொடையோ, வேண்டாத செழிப்பு!

## அரசியல்

தாய் ஒக்கும் அன்பு, கடல் போன்ற அறிவு, பெரும் புகழ் கொண்ட பேரரசன் தயரதன்;

.... தள்ள அரும் பெரும்புகழ்த் தயரதப்பெயர்
வள்ளல்; வள்உறை அயில் மன்னர் மன்னனே!
(அயில் - வேல் படை) - அரசியற்படலம், பா. 6

பா. 4 குறிப்பிடும் தாய் ஒக்கும் அன்பின் ...என்னும் தொடர் தாயினும் சாலப் பரிந்து.. தாயெலாம் அனையஎன் தந்தையே என்னும் அடிகளை நினைவூட்டுகின்றது.

பா. 5 குறிப்பிடும் அறிவு என்னும் அளக்கர் ...என்னும் தொடர்,

ஆழ்ந்தகன்ற நுண்ணியனே.
அஞ்சாமைஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு

ஆகிய அடிகளை ஒப்பு நோக்கி மகிழச் செய்கிறது. இக்குறட்பாவின் கருத்து மேல் 3 பாக்களில் விரவி நிற்பது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

## பேரரசன் தயரதன்

மகுடம் சூடிய பல அரசர்கள் தயரதனைப் பணிவதனால், அவன் காலில் அணிந்திருந்த பொற்கழல் தேயும்! பா அடியில் அமைந்த மகுட கோடியால் என்னும் தொடரின் அழகைப் பொருளோடு பொருத்திக் கண்டறிந்து மகிழ்க.

... கோவுடை நெடுமணி மகுட கோடியால்
சேவடி அடைந்தபொற் கழலும் தேயுமால்!

## சிறந்த அரசாட்சி

எய்யென எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பெறாத் தினவுறு முழவுத் தோளினான்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்எனக் காத்தினிது அரசுசெய் கின்றான் - மேலது, பா. 12

வறிஞன் ஓம்புமோர் செய்எனக் காத்து... ஆகா! என்னே அற்புதமான உவமை! ஏழை, தன் வயலை இரவும் பகலும் கண் போல் காத்திருப்பானன்றோ? அது போல, வையகத்தைத் தயரதப் பெயர் வள்ளல், மன்னர் மன்னன் காத்தார். இவ்வடி நமக்குச் சங்க இலக்கியம் குறுந்தொகை பா. 131 நவிலும் கருத்தை நினைவில் கொண்டு வந்து நிறுத்துகிறது! அப்பாடல்:

ஆடமைபுரையும் வனப்பின் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோர்ஏர் உழவன் போல,
பெருவிதுப் புற்றன்றால் நோகோ யானே. - ஓரேருழவனார்

## திருஅவதாரம்

திருஅவதாரப் படலத்தில், 134 பாடல்களில் கம்பர், கதை சொல்லும் அழகே அழகு! மோனை நயம் முந்திவந்து நிற்க, எதுகை நயம் எழுச்சி

காட்ட, பாவணிகள் சுவையைக் கூட்ட, கருத்தின் ஓட்டம் கங்கையை உவமை காட்ட, நெல் நாற்று தென்றலில் அலை அலையாக அசைந்து கண்வாய் அருந்தப் பசுமைவிருந்தை அளிப்பது போல் புதிய புதிய கருத்துத் தொடர்கள் அறிவுவிழைந்தேற்கும் அருஞ்சுவை விருந்தாக அமைய ...

கம்பர் கவிதை, கனித்தமிழ்ச் சோலை!
அதனாலன்றோ, கவிஞர் புகழ்தல் இப்படி,
"இமயம் கண்டால், குளிர்ப்பனி மாலை!
தமர்க்கும் நல்கான் வாழ்வியல், பாலை!
வணிக வழித்தடம், திரைசூழ் வேலை!
செயல்படாச் சோம்பலன் சொர்க்கம், மூலை!
பொன்நேர் விடியலைக் கொடுப்பது, காலை!
கம்பர் கவிநிகர் கனிமரச் சோலை!" – சி.பா.

உவர்க்கடல் நீர் மேல் உலாவரினும், உன்னத நன்னீர் வழங்கும் மழைமேகப் பயன்நிகர் கம்பர் கவிப்பயன்! பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியாரும்,

"சென்றிடு வீர்எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என எழில் தமிழில் எடுத்துரைத்தார்! ஆதிகாவியமாகிய இராமாயணத்தை வால்மீகி எழுதிய கதைப் போக்கின் கருத்தொற்றிக் கம்பநாடர் எழுதிய இராமவதாரம் பாரதி விழைவை யாப்பில் படம் பிடித்த நிகழ்வுக்குத் தோராயம் முக்காலாயிரமாண்டுக்கு முன்னரே, உருவாகி, உத்தமத்தமிழ்த் தேரில் உலாவந்த நம் தாய்மொழியாம் அன்னைக்கு, அழகிய பொற்கலன் ஆயிற்று!

பாலகாண்டம் திருஅவதாரப் படலத்திலுள்ள 134 பாடல்கள், கதை நாயகன் பிறப்பைக் கனித்தமிழ்ப் பொற சித்திரமாக வாசகர் முன் வைக்கின்றன!

இரவி திலகம் நேர் தயரதன் அயோத்தியை நெடுங்காலம் குறையின்றி காத்து அரசாண்டான், எனினும் மகவின்மை குறித்து வருந்தினான்.

அவ்வருத்தம் நீங்க, திருஅவதாரம் அமைய வாய்ப்பாக முன் நிகழ்ந்தன எண்ணிப் பார்க்கும் வசிட்டன் செயல்வழி, கரையோட்டம் நிகழ்வது பா. 5 முதல் 29 வரை. இவற்றுள் சில,

## உவமைஅழகு (பா.12)

கருமுகில் தாமரைக் காடுபூத்து நீடு
இருசுடர் இருபுறத் தேந்தி ஏந்தவர்த்
திருவொடும் பொலியவோர் செம்பொன் குன்றின் மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

## மகிழ்ச்சிப் பெருக்கு (பா.14)

ஆடினர் பாடினர் அங்கும் இங்குமாய்
ஓடினர் உவகைமா நறவுண்டு ஓர்கிலார்
வீடினர் அரக்கர் என்றுவக்கும் விம்மலால்
சூடினர் முறை முறை துளவத் தாள்மலர்.

## துயர் துடைக்க வேண்டல் (பா. 17)

ஐயிரு தலையினோன் அனுசர் ஆதியாம்
மெய்வலி அரக்கரால் விண்ணும் மண்ணுமே
செய்தவ மிழந்தன திருவின் நாயக
உய்திற மில்லை யென்றுயிர்ப்பு வீங்கினார்.

## ஆறுதல் தந்த சொல்

மசரதர் அனையர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளால் நீறு செய்யயாம்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி - பா. 21

முன் நிகழ்வை எண்ணி, மன்னர் மன்னனிடம்,
"புதல்வரை அளிக்கும் வேள்விசெய்" என,

குரு பணித்தல்: (பா. 29)

ஈதுமுன் நிகழ்ந்த வண்ணம் எனமுனி இதயத் தெண்ணி
மாதிரம் பொருத திண்தோள் மன்ன! நீவருந்தல், ஏழேழ்
பூதலம் முழுதும் தாங்கும் புதல்வரை அளிக்கும் வேள்வி
தீதற முயலின் ஐய சிந்தைநோய் தீரும் என்றான் !

தயரதன், அந்த மாமுனி சரணம் சூடி, அவ்வாறே வேள்வி செய்ய, வழிமுறைகளைக் கேட்டறிந்து செயல்படுத்தினான். அதற்கு உதவியவர் கலைக்கோட்டு முனிவன். இவரின் வரலாற்றில் (பா. 35-55) நாட்டில் பஞ்சம் நீங்கும் வகையில் மழை பொழிய உதவி செய்த நிகழ்ச்சி முன் வைக்கப்படுகிறது.

1. ... வான்வழுங் காது, ஆக,
பின்னும் முனிவரர்க் கேட்ப, "கலைக்கோட்டு
முனிவரின், வான்பிலிற்றும்" என்றார் - பா. 36

2. வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களன்அமர் கடுஎனக் கருகி வான்முகில்
சளசள எனமழைத் தாரை கான்றன
குளனொடு நதிகள்தம் குறைகள் தீரவே! - பா. 45

3. பெரும்புனல் நதிகளும் குளனும் பெட்புற
கரும்பொடு செந்நெலும் கவின்கொண் டோங்கிட
இரும்புயல் கனமீ திடைவிடா தெழுந்து
அரும்புனல் சொரிந்தபோ தரசு ணர்ந்தனன் - பா. 46

இப்பாடல்களைப் படிக்கும் போது, மிகப் பழங்காலத்திலும், மழையின் தேவை நன்கு அறியப்பட்டும், மழைப் பொழிவின் நேர்த்தி விழையப்பட்டும் இருந்த நிலை, மழை பெற மக்களின் முயற்சி போன்றவை வரலாற்றுத் துளிகளாக, இலக்கியச் சாரலாக வந்து விழுகின்றன.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்

-என்னும், கந்தபுராணப் பாயிரத் திருவிருத்தம் நினைவினில் வந்து நிற்கின்ற தன்றோ? இவ்வாழ்த்துப்பா எழுந்த காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டென்பர்.

கடந்த 20ஆம் நூற்றாண்டிலும், மழையின் தேவையை மாந்தர் மிக உணர்ந்து மழையால் மாநிலம் குளிர்ந்து செழிக்க விழைந்த போது, மழை வேண்டும் தமிழ்ப்பாக்களையெல்லாம் ஒருங்கு திரட்டிப் பாடியும் படித்தும் பணிந்தும் பயன்பெற்ற நிகழ்வை வரலாறு பதிவு செய்துள்ளது.

அறிவியல் வளர்ச்சியின் பயனாக, சுற்றுச்சூழல் மேம்பாட்டின் தேவை உணரப்பட்டு, மரங்களின் வளர்தொகுப்பு வான்மழை வரும் பாதைத் தொகுப்பு என அறியப்பட்டு, மரங்களின் வளர்ச்சி மனிதகுல வளர்ச்சி என உணர்த்தப்பட்டு, பொன்னான இந்நூற்றாண்டின் பூபாளம் இனிதே தொடங்கிவிட்டது. இந்நிலை தொடரும்வரை மழை, மண்ணுலகின் நண்பனே! மரங்கள் மழைப்பொழிவுக்கு வித்திடல்

மட்டுமன்றி, மண் சரிவைத் தடுத்து, நிலத்தடி நீர் வளம் சேர்த்து, புவியில் பொழிந்தமழை கடல் சென்று சேரும் முன் ஏழுமுறை வரை சுழற்சி வழி பயிர்க்கும் உயிர்க்கும் உதவும் என்னும் தேன்நிகர் செய்தியையும் முன்மொழிவு செய்கின்றது அற்புதக் கல்விதரும் ஆய்வு கொள் அறிவியல்!

"மரவளர்ப்பு, மாந்தர் நலவளர்ப் பாகும்;
அறவளர்ப்பின் நேர்என் றறி". - சி.பா.

இப்பகுதி, சுவையான பாடல்களின் தொகுப்பாகும். கற்கண்டின் சுவைத் தொகுப்பு போல ஒரு எடுத்துக்காட்டு.

திருந்திழை யவர்சில தினங்கள் தீர்ந்துழி
மருந்தினு மினியன வருக்கைவா ழைமாத்
தருங்கனி பலவொடு தாழை இன்கனி
அருந்தவ அருந்தென அருந்தி னான்அரோ! - பா. 42

எதுகை விஞ்ச, மோனை கொஞ்ச, எழில் தஞ்சம்கொண்ட ஏற்றமிகு இப்பாடலில், இயல்பு நவிற்சியணி வந்தமர்ந்து பொன்னொளி வீசுகிறது. செய்யுள் உணர்த்தும் உயர்ந்த கருத்துக்களில், நான் நீ எனப் போட்டியிட்டு முன்வந்து நிற்கும் மூன்று கருத்துரு நோக்குவோம்.

1. பழவகை, மருந்தினும் இனிய
2. முத்தமிழ்நேர் சுவைகாட்டும் முக்கனிகளின் பெயர்ப்பட்டியல்
   க. மா
   உ. பலா
   ங. வாழை

3. தாழை என்னும் சொல், தென்னையையும், "தாழைஇன்கனி" என்பது தென்னம் பழம் ஆகிய முற்றிய தேங்காயையும் குறிக்கும். இதனை உறுதி செய்ய பழமொழி நூல் பா. - 151, ஒப்பு நோக்குவோமே!

## தெங்கம்பழம்

வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ
நாய் பெற்ற தெங்கம் பழம் - முன்றுரை அரையனார்

கம்பர், வறுமை நீங்க வான்மழை கருவியானதெனப்பாடல் 55 முதல் அடியில் தெளிவுபடுத்துகிறார். வான் மழை பெய்ய உதவியவருக்குச் சொல்லணியும் சூட்டுகிறார்.

வறுமைநோய்தணி தரவான் வழங்கவே
உறுதுயர் தவிர்ந்ததவ் வுலகம் வேந்தருள்
செறிகுழல் போற்றிட திருந்துமா தவத்து
அறிஞனாண் டிருக்குநன் அரச என்றனன்.

வேள்வி செய்ய முனிவனை அழைக்க உரோமபதன் நாட்டுக்குத் தயரதன் செல்லல், வரவேற்பு, உரோமபதன் கலைக் கோட்டு முனிவனை அழைத்துவரல், வானவர் மகிழ்ச்சி, முனிவன் அயோத்தி செல்லல், அரசவை சேரல், மகவளிக்கும் வேள்வி இயற்ற தயரதன் வேண்டல், நிரல்உற உரைத்த கம்பர், பா. 82இல் காட்டும் ஆக்கம்

"... என்றலும், அரச! நீ இரங்கல்! இவ் உலகு
ஒன்றுமோ? உலகமீர் ஏழும் ஓம்பிடும்
வன்திறல் மைந்தரை அளிக்கும் மாமகம்
இன்று நீ இயற்றுதற் கெழுகாண் டென்றான்!"

வேள்வியை முறையாகச் செய்து, பொன்னும் பொருளும் பிறர்க்கீந்து, சரயு நதியில் நீராடினான் தயரதன்.

வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநல் துகிலொடு வரிசைக் கேற்பன
ஈந்தனன் பல்இயம் துவைப்ப ஏகிநீர்
தோய்ந்தனன் சரயுநல் துறைக்கண் எய்தியே - பா. 95

முனிவர் நல்வாழ்த்து கூறி விடை பெற்றனர்.
சிறிது காலம் சென்ற பிறகு, தேவியர் மூவரும் கருவுற்றனர்.

**கோசலை வயிற்றில் திருமால் திருஅவதாரம்**

ஒரு பகல் உலகெலாம் உதரத் துள்பொதிந்
தருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதியை
திருவுறப் பயந்தனள் திறம்கொள் கோசலை - பா. 103

பின், கைகேயி மைந்தனை ஈன்றாள். இளைய மென்கொடி இரண்டு மகவு ஈன்றனள். தயரதன் மிகவும் மகிழ்ந்து, எதிர்பாராப் பெரும் பரிசுகளை வாரி வழங்கினான்.

இறைதவிர்ந் திடுகபார் யாண்டுஏழ்! ஏழ்! நிதி
நிறைதரு சாலை தாள்நீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்துகொள் கவெனா
அறைபறை என்றனன் அரசர் கோமகன்! - பா. 110

என்னே விந்தை ! மக்கள் மகிழ்ந்தனர், வானவர் மகிழ்ச்சியைக் கம்பர் முன்னரே எடுத்தியம்பினார்.

## பெயர் சூட்டல்

### இராமன்

கராமலைய தளர்கைக் கரிஎய்த்தே
அராஅணை யில்துயில் வோய்என அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப்பொரு ளுக்கே
'இராமன்' எனப் பெயர் ஈந்தனன் அன்றே! - பா. 117

இராமனுக்கு இளையோர் முறையே பரதன், இலக்குவன், சத்துருக்கன் எனப் பெயர் பெறும் பேறுபெற்றனர். நால்வரின் வளர்ச்சியும் சிறப்பாக அமைந்தது.

## ஒப்பீடு

"அமிர்து உகு குதலையொடு அணிநடை பயிலா..." எனக் கரும்புத் தமிழில் கம்பர் பிழிந்த கனிப்பாச்சாறு, ஈரடி எழிலோவியமாம் திருக்குறளின் பாடல் சுவையினை நினைவூட்டுகிறது.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்!"

## கல்வி

இவர்களுக்குக் கல்வி கற்பித்தார் வசிட்டன். யானை ஏற்றம், தேரோட்டம், படைக்கலப் பயிற்சி நன்கு தேர்ந்தனர். இராமனின் நிழல் போல இலக்குவன் பழகினான்.

"ஐயனும் இளவலும் அணிநில மகள்தன்
செய்தவம் உடைமைகள் தெரிதர நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியும் மருவி
நெய்குழல் உறும்இழை எனநிலை திரிவார்!"

குடிமக்கள் எதிரில்வரின் அவர்களை நலம் விசாரிக்கும் பண்பாடு வாய்க்கப்பெற்று, அனைவரும் மகிழ, எல்லோரும் போற்ற இளமை அமைந்தது.

### இராமனின் சிறப்பு

"இப்பரிசு அணிநகர் உறையும் யாவரும்
மெய்ப்புகழ் புனைதர இளைய வீரர்கள்
தப்பற அடிநிழல் தழுவி ஏத்துற
முப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்"

- (பால..) திருஅவதாரப் படலம், பா. 134

# சங்க இலக்கியங்களில் சமயத் தொடர்பான அறச்சிந்தனைகள்

முனைவர். ப. திலீப்குமார்
நாமக்கல்

## முன்னுரை

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே, சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. ஆயினும் சில பழங்குடி மக்களிடம் சமய உணர்வுகள் காணப்படவில்லை என்பதாக முதலில் கருதப்பட்டது. பொதுவாகப் பார்க்கும் போது சமயம் என்பது மனிதனுக்கும், மனித நிலைக்கும் மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியதாக எண்ணப்படுகிறது. சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக்காலத்தும் காணப்படுவதொன்றும் என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் என்ற சொல் இரு பொருளில் வழங்கப் பெறுகிறது. ஒன்று குறி சொல்வது (அதாவது இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் அடையாளமாகக் கொள்வது என்ற பொருள்), மற்றொன்று இறைவனோடு ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும். நெறி அல்லது வழி என்ற பொருளிலும் பல சமயங்கள் கருதப்பட்டு வந்துள்ளன. தமிழ் மொழியிலும் திருநெறி, செந்நெறி என்ற சொல்லாட்சிகள் உண்டு.

### சங்க காலச் சமயம்

சங்க காலத் தமிழர்களிடையே சமயம் இன்றியமையாத இடம் பெற்றிருந்தது. அது தமிழர் வாழ்விலும், சங்கச் சமுதாயத்திலும், அவரது கருத்துகள் நம்பிக்கைகள் ஆகியவற்றிலும் இடம் பெற்றிருந்தது. இருப்பினும் சங்ககால மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கவில்லை. மனிதன் கட்புலனாகி இயற்கையின்பாற்பட்டவன், கடவுள் கண்ணுக்குப் புலனாகாது இயற்கைக்கும் புறம்பானது; இவ்விரண்டிற்கும் இடையே ஓர் உறவை உருவாக்கும் முயற்சியே சமயம் ஆகும்.

சங்க காலத் தமிழர்கள் சடங்கு வாயிலாகவும் வழிபாடு வாயிலாகவும் நிகழும் சமய மரபுகளை அறிந்து கூறி வைத்தனர். உயிர்ப் பொருள்களை வணங்குவதும் உருவ வழிபாடு செய்வதும்

அவர்கள் சமயச் சடங்குகளில் சில, அன்றிச் சடங்கோடு பொருந்தாத, தியானத்தோடு ஒன்றாகிய தவமும் சங்கத் தமிழர்கள் அறிந்து பயின்றனர்.

## மரத்தை வழிபடல்

மரக்கட்டையில் கடவுள் இருப்பதாக நம்பினர். எனவே மரக்கட்டையை **கந்து** நட்டு வழிபட்டனர். இந்தக் கந்தினை மரத்தினடியில் நட்டு வழிபட்டனர் போலும். அதுவும் ஆலமரம் போன்ற பெரிய மரத்தடியில் இருந்தது எனலாம். எனவே தான் சிவபெருமானும் ஆலமரத்தடியில் அமர்ந்தார். மரத்தடி கடவுளான அக்கந்தினைச் சுற்றி இருப்பிடமாக ஒரு திண்ணை கட்டினர். மரம், திண்ணை, கந்து ஆகிய இவை சூழ்ந்த இடத்தைப் பொதியில் என்றும் அம்பலம் என்றும் அழைத்தனர். பகை நாட்டிலிருந்து அழைத்து வரப்பெற்ற பெண்கள் கயத்தில் மூழ்கி அம்பலத்திற்குச் சென்று அவ்விடத்தைப் பசுஞ்சானம் கொண்டு மெழுகி நந்தா விளக்கை ஏற்றி வைத்து, மலர்களைத் தூவி வழிபட்டனர். ஆலமரத்தின் நிழலில் கடவுள் அமைக்கப்பட்டதோடு கிராமத்துப் பெரியோர்களும் அங்கே அமர்ந்து செயலாற்றினர் என்பது பின்வரும் புறநானூற்றுப் பாடலால் அறியப்படும்.

**"வளரத் தொடினும், வௌவுபு திரிந்து**
**விளரி உறுதரும் தீம்தொடை நினையா**
**தளரும் நெஞ்சம் தலை இ; மனையோள்**
**உளரும் கூந்தல் நோக்கி, களர**
**கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்**
***பசிபடு மருங்குலை, கசிபு கைதொழாஅ"***

என்ற புறநானூற்றுப்பாடல் கூறும். பிற்காலத்தில் கோயில்களில் தலவிருசட்ங்கள் ஏற்பட்டது. இது பழக்கத்தின் அடிப்படையில் தோன்றியிருக்கக் கூடும். இம்மரங்கள் அரிய மூலிகைகளாகத் திகழ்வதைக் காணலாம். (வில்வம், வேம்பு, அருகு போன்றவை நோய் தீர்க்கும் மூலிகைகளாகப் பயன்படுவதைக் கருத்தில் கொள்ளலாம்)

## சுறாக் கொம்பை வழிபடல்

கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் பௌர்ணமி நாளன்று கடலில் மீன்பிடிக்கச் செல்லாது கடற்கரையில் கூடுவார்கள். தாங்கள் நம்பி வழிபடும் கடல் தெய்வத்திற்கு மீனும், இறைச்சியும் படைத்து வணங்குவார்கள். கடல் தெய்வத்தின் சுறாவின் கொம்பினை நிறுத்தி வழிபடுவார்கள். இத்தகு நெய்தல் நில வழிபாட்டு முறையைப் பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலை சிறப்பாக எடுத்தியம்புகிறது. சிவந்த தலையையுடைய

பெரிய பரதவர் விழாநாளில் தம்முடைய மகளிரோடு கூடி, குடியிருப்பு நடுவிலுள்ள மனையிடத்தே சினையையுடைய சுறா மீனின் கொம்பை நட்டு, அதனிடத்தில் சிறிய வலிய தெய்வங்களை அமைத்து மலர் மாலைகளைச் சூடிப் பனையின் கள்ளை உண்டு விழா எடுப்பர். இதனை,

**"சினைச் சுறவின் கோடு நட்டு**
**மனைச் சேர்த்திய வல் அணங்கினான்,**
**மடற்றாழை மலர் மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்**
**புன்தலை இரும்பரதவர்**
**பைந்தழை மாமகளிரொடு**
**பாயிரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது**
**உவவு மடிந் துண்டாடியும்"**

என்ற பட்டினப்பாலை அடிகள் விளக்கும். இதில் சங்ககாலத் தமிழர்கள் ஒருங்குகூடி தெய்வத்தை வழிபட்டுக் கள்ளைக் குடித்து ஆடி மகிழ்ந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இறை வழிபாட்டிலும் ஒற்றுமையாகச் செயல்பட்டமையை அறியலாம்.

## நடுகல் வழிபாடு

சங்ககாலத் தமிழர்கள் இம்மை வாழ்வின் செம்மையிலும் இன்பத்திலும் நாட்டமுடையர்களாக இருந்தனர். சங்க காலத்தில் சமய வாழ்க்கை, நெறியாக இருந்தது.சமுதாய நிறுவனமாக வளரவில்லை. சிவனும் திருமாலும் சங்க காலத்தில் வணங்கப்பட்டு வந்த கடவுளர். இவை தோன்றுவதற்கு அடிப்படையான வீர வணக்கமாகிய நடுகல் வழிபாடு இருந்தது. சங்க காலத்தில் இம்மை, மறுமை, சொர்க்கம், நரகம், நிலையாமை, வீடுபேறு ஆகியவை பற்றியும் வினைப் பயன்களைப் பற்றியும் சான்றோர்கள் சிந்தித்தனர். துறவும் போற்றப்பட்டது. இறந்தார்க்கு நடப்பட்ட கற்களை வணங்கினர். போரில் வீரமரணம் எய்திய வீரர்களின் நினைவினைப் போற்றும் வண்ணம் வீரர்களின் பெயரையும்,பெற்ற வெற்றியையும், அவர்களின் பெருமைகளையும் பொறித்துக் கல்நட்டு வணங்கினர். இம்மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்திருக்கிறது. வெட்சித் திணையின் ஒரு கூறாக இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்று ஆறு நிலைகளை அவர் குறித்துள்ளமை கருத்தத்தக்கது. பசுக்கூட்டங்களைக் காத்த வீரனை,

**"ஊர்நனி இறந்த பார்முதிர் பறந்தலை,**
**ஓங்குநிலை வேங்கை ஒள்இணர் நறுவீப்**
**போந்தை அம்தோட்டின் புனைந்தனர் தொடுத்து,**
**பல்ஆன் கோவலர் படலை சூட்ட"**

கோட்பூவும், பனம்பூவும் சூட்டி வழிபட்டனர். ஆக்களைக் காத்த வீரர்கள் என்றால் நாட்டின் பொருளாதாரத்தைக் காத்தவராவர். மேலும்,

**நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**

என்று அகநானூறு கூறும்.

**சிவன் வழிபாடு**

சிவனைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. சிவபெருமான் ஐம்பூதங்களைப் படைத்தவன் என்றும், மழுவினை உடையவன் என்றும் மதுரைக்காஞ்சி கூறுகிறது.

**"நீரும் நிலனுந் தீயும் வளியும்**
**மாக விசும்போ டைந்துட னியற்றிய**
**மழுவா ளெடியோன்"**

மேலும் வெற்றிக்களத்திலே உயர்த்திய இடபக் கொடியைக் கொண்டவன். சிவன் தன் உடலில் பாதியை உமையம்மைக்கும் கொடுத்துள்ளான். அவன் பலர் புகழும் திண்ணிய தோள்களை உடையவன். முக்கண்களை உடையவன். மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன் என்பதனை,

**"........................வெள்ளேறு**
**வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்**
**உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்**
**மூவெயில் முருக்கிய, முரண்மிகு செல்வனும்"**

என்று திருமுருகாற்றுப்படை சிவபெருமானின் தோற்றப் பொலிவினை வர்ணிக்கிறது. சிவன் ஆலகால விடத்தை உண்டவன். நவிரத்தை உறைவிடமாகவும் உடையவன் என்பதை,

**"பேரிசை நவிரம் மேஎய் உறையும்**
**காரி யுண்டிக் கடவுள்"**

என்று மலைபடுகடாம் கூறும். சிவனுக்கு மூன்று கண்கள் உண்டு என்பதையும் தலையில் பிறையைச் சூடியவன் என்பதையும்,

**"பிறைநுதல் விளங்கு மொருகண்"**

என்று புறநானூற்றுப்பாடல் அடி விளக்குகின்றது. இத்தகு சிறப்புடைய சிவனது கோயில் பற்றி,

"முக்கட் செல்வர் நகர்"

என்று புறநானூற்றுப்பாடல் அடி குறிப்பிடுகிறது. நானிலக் கடவுளருள் ஒருவராகச் சிவன் குறிப்பிடப் பெறாவிட்டாலும் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியினால் சிவன் பரம்பொருளாகச் சிறப்புற்றுத் திகழ்ந்தான். மேலும் மதுரைக் காஞ்சியில் ஐம்பூதங்களோடு சிவனைத் தொடர்புபடுத்தியிருப்பது சிவன் ஐந்து பூதங்களாகவே இன்றும் விளங்குவதைக் காணலாம்.

## முருகன் வழிபாடு

சேயோன் மேய மைவரை யுலகம் என்று தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுளாக முருகனைக் குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சி நில மக்கள் முருகனை மலைவாழ் கடவுளாகப் போற்றினர். முருகன் தொடர்புடைய வழிபாடு வெறியாட்டுதல். தமிழர்க்குச் சிறந்த கடவுள் முருகன். அச்சொல் அழகு, தெய்வத்தன்மை போன்ற பொருள் பெறும். முருகன் மலைகளில் வாழ்வதாகக் கருதினர். முருகன் திருவிளையாடல்களில் ஒன்றான வள்ளித் திருமணம் சிறந்து விளங்கும் ஒரு மரபுக் கதையாகும். முருகன் கோயில் பற்றித் திருமுருகாற்றுப்படை மிக விரிவாகக் கூறும். 1. திருப்பரங்குன்றம் 2. திருச்சீரலைவாய், 3. திருவாவினங்குடி 4. திருவேரகம் 5. பிற குன்றுகள் (குன்று தோராடல் அவற்குரியது) 6. பழமுதிர்சோலை (அழகர் மலை) முருகனைக் குறமகள் வழிபட்டதைத் திருமுருகாற்றுப்படை சிறப்பாகக் கூறுகின்றது.

**"மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர,**
**நெய்யோடு ஐயவி அப்பி ஐது உரைத்து,**
**குடந்தம் பட்டு, கொழுமலர் சிதறி,**
**நளிமலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி,**
**நறும்புகை யெடுத்து, குறிஞ்சிப் பாடி"**

குறமகள் மாட்சியமைப்பட்ட தலைமையினையுடைய கோழிக் கொடியுடன் மயிலையும் மலைக்கோயிலிலே பொருத்த அமைத்து, அலங்கரித்து வெண்சிறுகடுகை அரைத்து நெய்யுடன் கலந்து தெய்வ நம்பிக்கை உண்டாகும் பொருட்டு வாயிற்படி முதலிய இடங்களில் தடவி தான் வழிபடுவதற்குரிய முருகனின் மூல மந்திரத்தைப் பிறர் செவியிற்படாமல் மெல்ல உச்சரித்து, குனிந்து வணங்கி, அழகிய மலர்களைத் தூவி அதன்பின்பு நீராடிவந்து வெவ்வேறு

நிறத்தினையுடைய இரண்டு ஆடைகளை உடுத்திச் சிவந்த நூலைக் கையிலே காப்புக் கட்டி வெண்பொரியினைத்தூவி மிக்க வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக்கிடாவின், இரத்தத்தோடு கலந்த வெள்ளரிசியைச் சிறுபலியாகப் பலி பீடத்திலும், நான்கு திசைகளிலும், ஆகாயத்திலும் தூவினர். பலதானிய வித்துக்களாகிய நிவேதனப் பொருள்களைப் பல பிரப்பங் கூடைகளில் இட்டுப் பரப்பிப் படையல் போட்டு அரைத்த சிறுபசு மஞ்சளோடு சந்தனம் முதலிய நறுமணம் உள்ள பொருள்களையும் சேர்த்து ஆங்காங்கே தெளித்து மிகக் குளிர்ச்சி வாய்ந்த செவ்வலரி மாலையினையும், நறுமணமும் குளிர்ச்சியும் அமைந்த பிற மாலைகளையும், தம்மில் அளவு ஒக்க நறுக்கிப் பந்தலிலே அமையும் படி தொங்கவிட்டு நனிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி நறும்புகை எடுத்துக் குறிஞ்சிப் பண்ணில் தோத்திரங்கள் பாடுவதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கே முருகனுக்கு நிகழ்த்தும் வழிபாட்டினைச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளமை போற்றுதற்குரியது. இதிலிருந்து சங்க காலத் தமிழர் வழிபாடு இனிது புலனாகும். சங்க காலத்தில் கொடி கட்டி, மாலையும், சேர்த்துக் கட்டி அழகுபடுத்தி மஞ்சள், சந்தனம் தெளித்து தூய்மைப்படுத்தி, பின்பு தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தூபம் எடுத்து போற்றிப் பரவுவது வழக்கம் என்பது புலப்படுகிறது.

## திருமால் வணக்கம்

மால் என்னும் சொல் பெரிது என்று பொருள்படும். ஆதலால் திருமால் திருவுடைய பெருங்கடவுள் ஆவார். மிகப்பழமை வாய்ந்தது வேதம். அதைவிடப் பழமை வாய்ந்தது திருமால் வணக்கம். வேதங்களில் திருமால் சூரியனோடு தொடர்புடைய ஒரு கடவுள். திருமால் இந்திரனின் நண்பன். நீனிறக் கடவுளான திருமாலோடு சேர்த்தே வாலியோன் (பலராமன்) குறிக்கப்படுகிறார். சிவன், வாலியோன், மாயோன், சேயோன் என்பவரே நாற்பெருங்கடவுளர் ஆவர்.

இந்திரன், யமன், வருணன், சோமன், வாயு, அக்கினி போன்ற ஐம்பூதத் தொடர்பானதும் திசை தெய்வ வணக்கங்கள் மாறி அவற்றின் இடத்தை மும்மூர்த்திகள் பெற்றனர்.

பரமாத்மாவின் மூன்று வேறுபட்ட, அமைதியாகவிளங்குபவர்கள் நான்முகன், திருமால், சிவன் ஆவார். இதிகாசங்களில் கண்ணன் திருமாலின் அவதாரமாகவும், ஒரு போர் வீரனாகவும் விளங்குகின்றான். தமிழ்நாட்டின் முல்லை நிலத் தெய்வமான மாயோனே திருமாலாகவும், கண்ணனாகவும் காட்சியளிக்கிறான்.

மாயோன் என்றால் கரியவன் என்று கூறலாம். தொல்காப்பியர் **“மாயோன் மேய காடுறை யுலகமும்”** என்பார். மதுரைக்காஞ்சியில் **“மாயோன்”** என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. திருமால் குற்றமற்ற நீலமணி போன்ற திருமேனியையும், கருடக்கொடியும் உடையவன் என்பதனை,

**“மண்ணுறு திருமணி புரையுமேனி**
**விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன்”**

என்கிறது புறநானூறு. இத்திருமால் தன்னுடைய கைகளிலே சங்கையும் சக்கரத்தையும் தாங்கியன் என்றும், மார்பிடத்தே இலக்குமியை வைத்திருக்கிறவன் என்றும் மாவலிவார்த்த நீர் தனது கையிலே சென்றதாக உயர்ந்தவன் என்றும் முல்லைப்பாட்டு விளக்குகிறது.

**“நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர்செல, நிமிர்ந்த மாஅல்”**

என்று முல்லைப்பாட்டு கூறுகின்றது.

## திருமகள் வழிபாடு

வெற்றிக்குக் கடவுள் கொற்றவை என்றும், செல்வத்திற்குக் கடவுள் திருமகள் என்றும், சங்க காலத் தமிழர் வழிபட்டமை தெரிய வருகிறது. செல்வத்திற்குக் கடவுளாகத் திருமகளைப் போற்றியமை சங்க நூல்களிலிருந்து தெளியலாம். திருமகளை இலக்குமி என்றும் திருமாலின் மனையாள் என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. திருமால் இலக்குமியைத் தன் மார்பில் தாங்குகிறான் என்று முல்லைப்பாட்டு கூறும்.

“...........................மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்த்த மாஅல்”

இம்முல்லைப்பாட்டின் அடிகள் திருமகளை 'மா' என்று குறிப்பிடுகிறது. திருமகளைக் காவல் தெய்வமாகக் கருதினர். இதனைத் ‘திருநிலை இய பெரு **மன்னெயில்**’ என்று பட்டினப்பாலை இயம்புகிறது. வீடு அனைத்து செல்வங்களும் நிறைந்து சிறந்து விளங்க வேண்டும் என்பது பண்டைத் தமிழர்களின் நோக்கமாக இருந்தது. எனவே தான் சங்ககாலத் தமிழர்கள் தங்கள் வீட்டு வாயில் நிலைகளில் திருமகளின் உருவம் செதுக்கி வைத்தனர். இதனை,

**“..................ஓங்கு நிலை வாயில்**
**திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்”**

என்று நெடுநல்வாடையும் 'தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை' என்று மதுரைக் காஞ்சியும் கூறுகின்றன. இவற்றால் திருமகள் செல்வத்திற்குத் தெய்வமாகப் போற்றப் பெற்றமை புலனாகும்.

## நான்முகன் பற்றிய குறிப்புகள்

பிரம்மனை நான்முகன் என்பர். நான்முகன் கார்மேனி வண்ணன் திருமாலின் உந்தியில் பிறந்தான் என்பதை,

**"நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்**
**நான்முகத் தொருவற் பயந்த"**

என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. நான்முகனைப் படைப்புக் கடவுள் என்று நம்பினர். நான்முகன் படைப்பில் இன்பங்களும் உண்டு. துன்பங்களும் உண்டு. இன்பத்துடன் துன்பத்தையும் கலந்து உலகில் இன்னாமையை மிகுவிப்பதைக் கண்ட பக்குடுக்கை நன்காரியார் மிகவும் மனம் வருந்திப் பின்வருமாறு பாடுகின்றார்.

**"ஓர் இல் நெய்தல் கறங்க ,ஓர்இல்**
**ஈர்ந் தண்முழவின் பாணி ததும்ப**
**புணர்ந்தோர் பூஅணி அணிய பிரிந்தோர்**
**பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப**
**..............................இவ்வுலகம்**
**இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே"**

இப்பாடலில் இவ்வுலகில் துன்பம் மிகுந்திருப்பதைக் கண்டு **'பண்பில்லா நான்முகன்'** என்று பழி சூட்டுகின்றார்.

## இந்திரன் வழிபாடு

**"மாயோன் மேய காடுறை யுலகமும்**
**சேயோன் மேய மைவரை யுலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

என்று தொல்காப்பியர் நானிலங்களுக்கென்று தெய்வங்களை வகுத்துக் கூறியுள்ளார். தொல்காப்பியத்தின்படி ஆற்றங்கரைகளிற் பரந்து கிடக்கும் மருத நிலத்தின் கடவுள் இந்திரனாவான். சங்க காலத்தில் இந்திர வழிபாடு மக்களிடையே அவ்வளவு செல்வாக்குப் பெறவில்லை. இந்திரன் ஆயிரம் கண்களை உடையவன். நூறு வேள்விகளை நடத்தியவன்.

முகமலர்ச்சியுடைய இந்திரன் தன் பகைவரை வெற்றி கொண்டான். இந்திரன் நான்கு தந்தங்களையுடைய யானை மீது ஏறி வருபவன் என்பதனை,

**"நூற்றுபத் தடுக்கிய நாட்டத்து நூறுபல**
**வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து,**
**ஈர்இரண் டேந்திய மருப்பின் எழில்நடை,**
**தாழ்பெருந் தடக்கை உயர்ந்த யானை**
**எருத்த மேறிய திருக்கிளர் செல்வன்"**

எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடும். ஒளி பொருந்திய தொடியினையும், வச்சிராயுதத்தையும் உடைய இந்திரனுக்குச் சங்ககால மக்கள் கோயில் கட்டி வழிபட்டனர். இதனை,

**"திண்தேர் இரவலர்க்கு, ஈந்த தண்தார்,**
**அண்டிரன் வரூஉம் என்ன, ஒண்தொடி**
**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்,**
**போர்ப்புறு முரசம் கறங்க**
***ஆர்ப்பு எழுந்தன்றால் விசும்பினானே"***

என்று புறநானூற்றுப்பாடல் இனிது உணர்த்தும் இந்திரனுக்கு விழா எடுத்தமையை,

**"இந்திர விழாவில் பூவி னன்ன"**[60]

என்று ஐங்குறுநூறு கூறுகிறது. இதனைச் சிலப்பதிகாரத்தாலும் தெளியலாம். சங்ககாலத் தமிழர்கள் சிறு தெய்வங்களையும் வழிபட்டனர். மரங்களிலும் மலையிலும் கடவுள் உறைவதாக நம்பினர்.

## மறுபிறவி நம்பிக்கை

கடத்தற்கரிய போரைச் செய்யும் வலியினையுடையோர் நீண்ட இலையை உடைய வேலாற் புண்ணுற்று வடுப்பட்ட உடம்போடு மேலுலகம் புகுவர் என்பதை,

**"ஆரம குழக்கிய மறம்கிளர் முன்பின்**
**நீளிலை எகம் மறுத்த உடம்பொடு**
**வாரா உலகம் புகுதல் ஒன்று"**

என்ற புறநானூற்றுப் பாடல் வலியுறுத்தும். மேலும், உயர்ந்த விருப்பத்தை உடைய உயர்ந்தோர்க்குத் தாம் செய்த நல்வினையிடத்து அதனை அனுபவித்தல், உண்டாமாயின் அவர்க்கு இருவினையும் செய்யப்படாத தேவருலகத்தின்கண் இன்பம் அனுபவித்தலும் கூடும்.

அவ்வுலகத்தின்கண்ட நுகழ்ச்சி இல்லையாயின் மாறிப் பிறத்தலை உடைய பிறப்பின்கண் இன்மை எய்தவும் கூடும் என்று மறுபிறப்பில் தமிழர் கொண்டிருந்த நம்பிக்கையைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் அடிகள் நன்கு உணர்த்தும்.

**"உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்கு**
**செல்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்**
**தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்**
**மாறிப் பிறப்பி னின்மையும் கூடும்"**

இவற்றிலிருந்து சங்ககாலத் தமிழர்கள் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது புலனாகும்.

## சமணமும் பௌத்தமும்

சங்க காலத் தமிழ் மக்கள் போரையும் காதலையும் போற்றி வாழ்ந்தாலும், சங்க இலக்கியங்களில் புலாலுண்ணாமை, கொல்லாமை, அருள் உணர்வு ஆகியவை மனிதனுக்குரிய நற்பண்புகளாகக் கருதப்படுகின்றன. வணிகரின் பண்புகளைப் பட்டினப்பாலை,

**"நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்**
**ஏமாப்ப இனிது துஞ்சி,**
**கிளைகலித்துப் பகை பேணாது**
**வலைஞர் முன்றில் மீன்பிறழவும்,**
**வலைஞர் குரம்பை மாஊண்டவும்**
**கொலைகடிந்தும் களவு நீக்கியும்"**

என்று கூறுகிறது. இப்பட்டினப்பாலை அடிகளில் வணிகர் எவ்விடத்தில் வாழ்வரோ அவ்விடத்தில் உள்ள கடலிலே மீன்கள் துன்பமுறாது வாழும். வயல்களில் மாட்டு மந்தைகள் இன்பமாகக் காலம் கழிப்பன. வணிகர் சுற்றத்தோடு சிறந்து இன்பமாக வாழ்வர். இவருக்குப் பகைவர் இல்லை. மீன்கள் யாவும் பரதவர் குடியிருப்பின் அருகில் துள்ளி விளையாடுவன. மாடுகள் யாவும் வணிகர் குடில்களில் குறைவில்லாது பெறுகின்றன. இவ்வாறு கொலைகடிந்து வாழ்கின்றனர் வணிகர் என்பதை விளக்கும். இங்கே சமண பௌத்தரின் உயர்க்கோட்பாடாகிய கொல்லாமை என்னும் அறச்சிந்தனை தாக்கம் பெற்றிருப்பதைக் காணலாம்.

தமிழகத்தின் தலை நகரங்களிலே சமண, பௌத்த துறவிகள் தங்கித் தத்தம் சமயச் சித்தாந்தங்களை மக்களிடையே பரப்புவதற்குப்

பள்ளிகள் இருந்தன. காஞ்சிபுரத்தில் அனைத்துச் சமய அறிஞர்களும் தத்தம் கடவுளர்களைத் தொழுது வணங்கி விழாக்கள் எடுத்தனர் என்பதனை,

**"..................பலர் தொழ**
**விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்"**

என்ற தொடர்கள் உணர்த்தும்.

இச்சமயத்தாருள் சமண பௌத்தர்களும் இருந்தனர். இவர்கள் மாடுகள் கட்டப்பட்ட மாட்டுக் கொட்டில்களுக்கருகில் அமைந்த சமண பௌத்தப் பள்ளிகளைப் பற்றிப் பட்டினப்பாலை கூறுகின்றது.

**"...............பகட்டெருத்தின் பலசாலை ;**
**தவப்பள்ளி"**

இவ்வாறு சோலைகளிலும், பள்ளிகளிலும், தங்கிய சமணத்துறவிகள், இல்லறத்திலேயேயிருந்து சமணசமய விரதங்களைக் காத்துப் போற்றிய சாவகர்களை உலக நோன்பிகள் என்று அழைத்தனர். இதனை,

**"...............வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்**
**பூவும் புகையும் சாவகர் பழிச்ச,**
**சென்ற காலமும், வரூஉம் அமயமும்,**
**இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,**
**.....................................**
**இறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்........**

இப்பாடல் அடிகளிலிருந்து சமண பௌத்த துறவிகளுடைய வாழ்க்கைப் பண்புகளும், அவர் தம் உயரிய குறிக்கோள்களும் இனிது புலனாகும். மேலும் சங்ககால மக்கள் பௌத்தப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர் என்பது இளம்போதியார், சீத்தலைச்சாத்தனார் என்ற புலவர்களின் பெயர் அமைப்பிலிருந்து விளங்கும்.

## முடிவுரை

தமிழரின் பண்டைய வழிபாட்டு முறைகள், இறை நம்பிக்கை, நானிலக் கடவுளர்கள், வழிபாட்டு முறைகள், சைவ சமயம், வைணவ சமயம், சமண பௌத்த சமயம் என்று அச்சமயங்கள் கூறும் கடவுளர், மெய்ப்பொருள் இவற்றை வரிசைப்படுத்தி அமைத்துஇச்சமயங்களினால் ஏற்பட்ட அறச்சிந்தனைகள் தொகுக்கப்பெற்றுள்ளன. அரசியல் அறங்கள், மக்கள் வாழ்வியல் சிந்தனைகள், சமயந் தொடர்பான அறச்சிந்தனைகள் என்று வரிசைப்படுத்தி அமைக்கப்பெற்றுள்ளது".

# ஈடிலா இல்லறம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

எழில்குலுங்கும் ஸ்காட்லாந்தைக் காண்ப தற்கே
என்மனைவி யுடன்நானும் சென்றி ருந்தேன்.
பழகியஎன் மகனிடத்தில் ஏதோ கேட்கப்
பக்கஇல்ல ஆங்கிலப்பெண் ஒருத்தி வந்தாள்;
வழக்கம்போல், இவர்களென்றன் பெற்றோர் ! என்றே
வந்தவர்க்கே அறிமுகத்தைச் செய்தான் மைந்தன்;
இழையோடும் நகையோடு, நலமா? என்றே
ஏந்திழையாள் என்துணைவி அருக மர்ந்தாள்!

ஒரு கேள்வி கேட்பதற்கே மன்னி யுங்கள்;
உடன்வந்த இக்கணவ ருடனே தாங்கள்
ஒருங்கிணைந்தே எத்தனைநாள் வாழ்ந்தீர்? என்றாள்.
உடனடியாய் என்துணைவி, எங்கள் வாழ்க்கைப்
பெருவாழ்வும் நாற்பத்தைந் தாண்டாய்! என்றார்.
பெண் அவளும் எத்தனை நாள் இன்னும் இந்த
ஒரேகணவ ருடன்வாழ்வீர்! என்றாள். எங்கள்
உயிர்அடங்கும் வரை! என்றார் என்றன் இல்லாள் !

தூய்மைமிகு திருமணத்தில், இல்ல றத்தில்
துளியளவும் நம்பிக்கை இலாத தாலே
போய் இணைந்தே வாழுகின்றார் ஆணும் பெண்ணும்
புளித்துவிட்டால் பிரிகின்றார்; இந்த நாளில்
சேய்பிறந்தால் அதன்வாழ்வும் இருட்டே! இந்தச்
சேதியெலாம் திரட்டியபின் உரத்துச் சொல்வேன்;
வாய்மைமிகு நம்குடும்பக் கட்ட மைப்பே
வையகத்தின் வழிகாட்டி! மறுப்போர் உண்டா?

# வாசகர் வாசகம் (1)

முனைவர் கி. இராசாவின் உலா இலக்கிய வகை வளர்ச்சி பற்றிய ஆய்வுக் கட்டுரை படித்தேன். மிக நன்று.

புலவர் தா. குருசாமி தேசிகரின் வெள்ளியம்பலவாண முனிவர் புலமையையும் அவர் செய்த திருப்பணிகளையும் அறிந்து கொள்ள வாய்ப்புத் தந்த செந்தமிழ் இதழுக்குப் பாராட்டு.

இவண்
**முனைவர். ந. சொக்கலிங்கம்**

# உக்கிரப்பெருவழுதி – ஓர் ஆய்வு

வித்துவான் தா. குருசாமி தேசிகர்
*தருமையாதீனப் புலவர்*

உக்கிரப்பெருவழுதி திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தில் "மதுரைத்தொகை ஆக்கினானும்" என்று பாராட்டப்படுகின்றான். இவ்வுக்கிரப்பெருவழுதியை. உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "சங்கம் நிறுவிய. முடத்திருமாறன் முதலா உக்கிரப் பெருவழுதி ஈறாப் பிறங்கிய பாண்டியர்கள் நரபதிகள்" என்றும், "கவியரங்கேறியவர் மூவர்" என்றும் மொழிவார். புறநானூற்றில் 21ஆம் பாடலில் "கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி" என்று ஐயூர் மூலங்கிழார் புகழ்வார்.

## உ.வே.சா. குறிப்பு

"இவ்வுக்கிரப்பெருவழுதி, சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவர்களுடைய நண்பன். கடைச்சங்கம் நிறுவிய பாண்டியர்கள் நாற்பத்தொன்மருள் ஒருவன். இதனை இறையனார் அகப்பொருளுரையாலும், சிலப்பதிகார உரையாலும் உணர்க. இவ்வுக்கிரப்பெருவழுதி முன்னிலையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்ட செய்தியை இம்மன்னன் கொடுத்த வெண்பாவால் உணரலாம். அவ்வெண்பா,

**நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்**
**தான் மறைந்து வள்ளுவனாய் தந்துரைத்த நூன்முறையை**
**வந்திக்க சென்னி வாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்**
**சிந்திக்க கேட்க செவி.**

எட்டுத்தொகையுள் அகநானூற்றைத் தொகுப்பித்தோன் இவனே. புலவரையிறந்த என்னும் புறப்பாட்டால், வேங்கை மார்பன் என்னும் பகைவனை வென்று. அவன் ஆட்சியிலிருந்த, பல சிற்றரண்களையுடைய கானப்பேரெயிலைக் கைக் கொண்டான் என்று விளங்குகிறது. இவன் பெயர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியெனவும், கானப்பேர் (காளையார்கோயில்) தந்த உக்கிரப் பெருவழுதியெனவும் வழங்கும். இவனைப் பாடிய புலவர் ஐயூர் மூலங்கிழார்; ஔவையார் ஆவர் என்பது உ.வே.சா.குறிப்பு ஆகும்.

**வேம்பத்தூரார் திருவிளையாடற் குறிப்பு**

காலத்தால் முந்திய திருவிளையாடற்புராணத்தில் உக்கிரப்பெருவழுதியைப் பாராட்டி தோத்திரப் பகுதியில் ஒரு பாடல் உள்ளது.

"தாரார் நிம்பத் தொடையிலங்கச்
சசிமாமரபு தனில்வந்து
பாரார் பெருவாழ் வுறத்தெய்வப்
பாண்டியனென்று முடிசூடிப்
பேரா தரவா லரசாளும்
பெருமான் திருமா மகவாய்முச்
சீரார் சங்கத் தமிழாய்ந்த
தென்னன் பொன்னங்கழல் போற்றி"

- என்ற பாடலில் உக்கிரப்பெருவழுதி, வேப்பம் பூ மாலை சூடியவன் என்றும், சந்திர மரபில் வந்தவன் என்றும், பாண்டியர் குலந்தழைக்க வந்த மீனாட்சிசுந்தரர் திருமகனாய் வந்தவன் என்றும், சங்கம் இருந்து தமிழை ஆராய்ந்தவன் என்றும் கூறப்படுகின்றன. பரஞ்சோதி முனிவர் திருவிளையாட்லில் பாண்டியர் குலந்தழைக்க சுவாமி, அம்பாள், முருகன் மூவரும் வந்த செய்தி மட்டும் காணப்படுகிறது.

**பரஞ்சோதி முனிவர் குறிப்பு**

உமையம்மை மீனாட்சியாகவும், சிவபெருமான் சுந்தரேசராகவும், முருகன் உக்கிரப் பெருவழுதியாகவும் எழுந்தருளி ஆட்சி புரிந்த நாடு, பாண்டிய நாடன்றி, உலகில் வேறு நாடுகள் உளவோ? என்ற கருத்தில் பரஞ்சோதியார் பாடிய திருவிளையாடற் புராணப்பாடல் சிந்தனைக்குரியது.

உலகம் யாவையும் ஈன்றவளும் உம்பருள் உயர்ந்த
திலகநாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவரால் முறை செய்த நாடு இஃதன்றிச் சலதி
சுலவு பாரினுண்டாகுமோ துறக்கத்தும் அஃதே

என்ற பாடல் மூவரும் பாண்டியர்க்கு அருள் செய்ததை விளக்கும்.

**செந்தமிழ்க் குமரகுருபரர் குறிப்பு**

இம்மூவரும் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளிய காரணம், பாண்டிய மரபு தழைப்பதற்காக மட்டுமின்றி தண்டமிழ்ச்சுவை அருந்தி இன்புறுவதற்கே எழுந்தருளியதாகச் செந்தமிழ் குருபரர் மதுரைக் கலம்பகத்தில் அருளுவார். அருளிய அப்பாடலில் உக்கிரப்

பெருவழுதியாக வந்தவர் முருகவேள் என்று, பாண்டியற்கு தெய்வநலம் கற்பிப்பார். அப்பாடலும் சிந்திக்கத்தக்கது.

"தமரநீர்ப் புவன முழுது ஒருங்கீன்றாள்
தடாதகா தேவி யென்றொருபேர்
தரிசிக்க வந்ததுவுந் தனிமுதலொருநீ
சவுந்தர மாறனானதுவும்
குமரவேள் வழுதிவுக்கிரன் எனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுணவு எழுந்த வேட்கையால் எனில் இக்
கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்" - என்ற பாடலில் மூலம்,

பாண்டியன் உக்கிரப்பெருவழுதி முருகனாகச் சித்தரிக்கப்படுவது சிந்திக்கத்தக்கதாகும்.

## பாண்டியர் மரபு நிலை

பண்டைப் பாண்டியர் அனைவரும் சிவநெறியில் நின்றவர் என்று சேக்கிழார், மூர்த்தி நாயனார் புராணத்தில் தெய்வத் தமிழாய்ந்த நிலையை, மதுரைத் தமிழ்ச்சங்கம் செயல்படுத்தியதைக் குறிப்பிடுவார். மேலும் குலச்சிறை நாயனார் சம்பந்தரை வரவேற்றருளும் போது, சென்ற காலத்தின் பழுதிலாத் திறம் மீளவேண்டும் என்று சம்பந்தரால் சிவநெறி எழுச்சி பெற்றதாக அருளுவார். இச்சிவநெறியை நன்றாகப் பேணி வளர்த்த பாண்டியர்களில், உக்கிரப்பெருவழுதி தலைசிறந்தவர் என்றும், தமிழ் நூல்களைத் தொகுத்தவர் என்றும், நன்றாக அடையாளம் காட்டியவர் சம்பந்தரும், வேம்பத்தூராரும் ஆகிய மூவருமேயாவர். உக்கிரகுமார பாண்டியர் வெற்றி வீரர் என்பதும், தொகை நூல்களைத் தொகுத்துத் தந்தவர் என்பதும் ஒருவாறு அறிந்து அப்பாண்டியரைப் போற்றி வணங்குவோமாக!

திருஞானசம்பந்தர், இவ்வுக்கிரப்பெருவழுதி தமிழ்ச்சங்கத்தில் தொகை நூல்களைத் தொகுத்தவன் என்றும், தெற்றென்று சிலம்புரந்தவன் என்றும் திருப்பாசுரப்பாடலில் கூறுவதை நிறைவாக எண்ணி அப்பாடலை ஓதி ஆராய்வோமாக. அப்பாடல் -

அற்றன்றி மதுரைத் தொகையாக் கினானும்
தெற்றென்று தெய்வந்தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானுமன்றே.

# வளாகச் செய்திகள்

தமிழுக்குக் கதியாகத் திகழும் கம்பராமாயணமும், திருக்குறளும் தமிழ்கூறு நல்லுலகில் பரவலாகக் கிடைக்கப் பெற வேண்டும் என்றும் தமிழ் இலக்கியங்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தமிழ் ஆர்வத்தோடும் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த பாலவநத்தம் ஜமீன் வள்ளல். பொன் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் 148வது பிறந்தநாள் விழா 21.03.2014 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முற்பகல் 9மணியளவில் தமிழ்ச்சங்கச் சாலையில் அமைந்துள்ள வள்ளல் அவர்களின் திருவுருவச்சிலைக்கு, மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் திரு. இரா. அழகுமலை அவர்களும் செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திரு. கோச்சடை இரா. குருசாமி அவர்களும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்களும், செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்களும் பிற நிர்வாகிகளும் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்களும், தமிழ்ச்சங்க அலுவலர்களும் ஒருங்கே சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

முற்பகல் 10.30 மணிக்குச் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. நிகழ்விற்குச் செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திரு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள் தலைமையேற்க, மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் திரு. இரா. அழகுமலை அவர்கள் முன்னிலை வகித்தார்கள். செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு சு. வீரணசாமி அவர்களும், மதுரைத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்களும் வாழ்த்துரை நல்கினர். வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரின் வாழ்வும் வாக்கும் என்ற பொருளில் மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நிகழ்த்தப் பெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உலகத்திருக்குறள் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. ந. மணிமொழியன் அவர்கள் சிறப்புரை வழங்கி பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசினை வழங்கினார்கள். பிற்பகலில் உரை அரங்கம் நடைபெற்றது. செந்தமிழ்க் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் முனைவர் பா. நேருஜி அவர்கள், வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் படைப்புத் திறன் என்ற பொருளிலும், உதவிப்பேராசிரியை முனைவர் ஜெ. கோகிலா அவர்கள் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப்பணி என்ற பொருளிலும் உரையாற்றினார்கள். தமிழ் ஆர்வலர்களும் நகரப் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

- **முனைவர் மு. மீனா**

# இராமலிங்கரின் உயிர், உறுதிப் பொருள் பற்றிய கருத்தமைவுகள்

பி.ஆர். நரசிம்மன்
மதுரை.

இராமலிங்க அடிகள் தமிழகத்தின் மிகப் பழமையான சித்தர் மரபில் தோன்றியவர். தமிழகச் சித்தர்கள் மரணமில்லாப் பெருவாழ்வுக் கலையில் வல்லவர்கள். மரணமில்லாப் பெருவாழ்வுக் கலையைப் பற்றி முதன் முதலாக எடுத்துக் கூறியவர் திருமூலர் ஆவார். சித்தர்கள் பெற்றிருந்த இக்கலையினைப் பற்றித் தமிழர்கள் பெருமை கொள்ளலாம். ஆனால், சித்தர்களின் இவ்வரிய சாதனை பரந்த உலகின் கண் இன்னமும் தெரிவிக்கப்படாமலே இருந்து வருகின்றது. சித்தர்களின் மெய்ப்பொருளியல் சிந்தனைகள் பாரத மெய்ப்பொருளியலில் கூட இதுகாறும் இடம் பெறவில்லை. மரணமில்லாப் பெருவாழ்வுக் கலையை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ள இராமலிங்க அடிகளின் மெய்ப்பொருளியல் சிந்தனையைப் பாரத மெய்ப்பொருளியலில் சேர்த்தாலே பாரதச் சிந்தனை முழுவதுமே மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு விளங்கும்.

அனைத்து மெய்ப்பொருளியல் சிந்தனைகளும் உயிரானது இயனுலக வாழ்க்கையில் அடையவேண்டிய உறுதிப் பொருள்களில் இறுதியானதாக முக்தி எனப்படும் வீடுபேற்றினைக் குறிக்கின்றன. இராமலிங்க அடிகளும் வீடுபேற்றுக் கொள்கையை ஏற்றுக் கொள்பவரே. ஆனால் இவருடைய வீடுபேற்றுக் கொள்கை ஏனைய சிந்தனைகள் அனைத்திலிருந்தும் மாறுபட்டதாக விளங்குகிறது. இராமலிங்கரின் கருத்துப்படி பொருள்நிலையில் இறைவனைப் போன்றதே உயிராகும். உயிர் இறைவனைப் போன்றே உணர்வியல்பு அல்லது ஒளியியல்பைக் கொண்டதாகும். உயிரின் இயல்பை இராமலிங்க அடிகள் குறிப்பிடும் பொழுது ஏகதேசம் என்றும், பிரத்யேக ஆத்ம சைத்தன்ய வஸ்து என்றும் கூறுகின்றார். இச்சொற்கள் இறைவன் எவ்வாறு நிலைத்த பொருளோ அதே போன்று உயிரும் நிலைத்த பொருள் என்றும் உயிரானது தனித்த உணர்வுப் பொருள் என்றும் பொருள்படும். உயிரானது தனது அனைத்து வெளிப்பாடுகளிலும் ஒளியாகவே இருப்பதால் இறைவனுடன் மட்டுமே தொடர்பு கொண்டது. இராமலிங்க அடிகள் உயிரில் மூன்று

நிலைகளைக் குறிப்பிடுகின்றார். அவை 1. வெண்மைஒளி கட்புலனுக்குத் தோன்றுவது 2. உயிர் ஒளி மனித மூளையில் உணரப்படுவது 3. உள்ளொளி இருதயத்தில் உணரப்படுவது. இவற்றுள் உள்ளொளி இறைவனாகும். எனவே தனித்த உயிரில் இறைவன் உள்ளொளியாக இருக்கின்றார்.

இராமலிங்க அடிகள் தனித்த உயிர் அணு அளவினதாக இருப்பினும் அது அனைத்தையும் பரவி நிற்பது என்றும், உயிர் இறைவனைச் சார்ந்திருப்பினும் இறைவனைப் போன்றே நிலையானது என்றும், இறைவனால் படைக்கப்பட்ட உடலை உயிர் பெறுகின்ற பொழுது மனிதனாகிறது என்றும் குறிப்படுகின்றார். தனித்த உயிரை அகம் எனவும், அது காரண உடலைப் பெற்றிருக்கும் போது அகப்புறம் எனவும், நுண்ணிய உடலைப்பெறும் போது புறம் எனவும் பரு உடலைப் பெறும்போது புறப்புறம் எனவும் பெயர் பெறும். காரண உடம்பு அறியாமையினாலும், நுண்ணிய பரு உடல்கள் சுத்த தோத்திரம மாயைகளால் ஆனவை என்றும் இராமலிங்கர் கூறுகின்றார்.

இராமலிங்கரின் கருத்துப்படி உயிரைத் தவிர்த்து உடல்கள் அனைத்தும் உணர்வற்றவை. எனவே அவை இன்ப துன்பங்களை நுகர முடியாது. இன்ப துன்பங்களை உயிர் மனம், புலன்களின் உதவியால் நுகர்கின்றது. அதே போன்று உயிரின் இன்ப துன்ப நுகர்வு நிலைகள் மனத்திலும், புலன் உறுப்புகளிலும், உடலிலும் பிரதிபலிக்கின்றன. உயிரானது இயலுலக இருப்பில் பசி, பிணி, மூப்பு, இறப்பு போன்ற துன்பங்களுக்கு உள்ளாகின்றது. இவற்றுள் பசியை மிகக் கொடிய துன்பம் என இராமலிங்கர் கூறுகிறார். எனவே பசியை நீக்குவதே மானுடத்தின் மிகப் பெரிய கடமை என்கிறார். இக் கடமையாகிய ஜீவகாருண்யம் உயிர் இரக்கத்தினால் மட்டுமே நிகழ்த்தப்படும். இவ்வுயிர் இரக்கம் அனைத்து ஜீவர்களுக்கும் இயல்பான உரிமையாகும். ஏனெனில் அனைத்து ஜீவர்களும் இறைவனின் பகுதிகளாக இருப்பில் அடிப்படையான ஆன்மீக ஒருமையால் சகோதரர்களாக இருப்பதால் என்று இராமலிங்கர் கருதுகின்றார். உயிரின் இருப்பு இறைவனின் அளவற்ற சக்திகளினால் உண்டாக்கப்பட்டது. இரக்கம் அல்லது கருணை மனிதச் செயல்களில் மூவகையாக வெளிப்படலாம். அவை 1. மனிதர்கள் பசி, பிணி, அறியாமை, பயம் போன்றவற்றால் துன்புறுகின்ற போது உதவி செய்வது 2. கொல்லாமை 3. புலால் உண்ணாமை. இவற்றுள் பசிக்கொடுமையை நீக்குவதும், கொல்லாமையும் பரஜீவகாருண்யம்

என்றும், ஏனையவை அபரஜீவகாருண்யம் என்றும் இராமலிங்கர் குறிப்பிடுகின்றார். ஜீவகாருண்யமே மனிதனின் மிக உயர்ந்த நற்பண்பாகும். அதுவே வழிபாட்டின் முடிவுமாகும்.

உயிரைப் பற்றிய மேற்கூறிய கருத்தமைவைக் கொண்டிருந்த இராமலிங்கர் உயிரின் முடிவைப் பொறுத்து பாரத மெய்ப்பொருளியல் கருத்துக்கள் அனைத்திலிருந்தும் வேறுபடுகின்றார். அவருடைய கருத்தின்படி மனிதனின் முடிவு மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறுவதேயாகும். மரணமில்லாப் பெருவாழ்வு என்னும் உயிரின் முடிவை அல்லது வீடுபேற்றை இராமலிங்கர் இரண்டு நிலைகளாகப் பிரிக்கின்றார். முதல் நிலையானது முக்தி எனப்படும் வீடுபேறு ஆகும். இது உயிரானது உடலுடன் தன்னைத் தவறாக முற்றொருமைப்படுத்திக் கொண்டதிலிருந்து விடுபடுவதாகும். இரண்டாவது சித்தி எனப்படுவது. இது உணர்வும், ஒளியுமற்ற பருஉடலை உணர்வும் ஒளியும் முழுவதுமாக உடைய ஒளி உடம்பாக மாற்றுவதைக் குறிக்கும். முக்தி இவ்வகையில் சித்தியை அடைவதற்குரிய அடிப்படையான கருவியாகும். சித்தி எனப்படும் ஒளி உடம்பைப் பெறுவதே இறுதியான வீடுபேற்று நிலையாகும் என்று இராமலிங்கர் கூறுகின்றார். முக்தி தொடக்க நிலையெனில் சித்தி வீடுபேற்றின் இறுதி நிலையாகும்.

முக்தி முடிவாகவே கருதப்படின் பரு உடலை விட்டுவிட வேண்டியிருக்கும். ஆனால் இராமலிங்கர் முக்தியை ஒரு வழியாகவும், அதனை அதற்காகவே அடையப்பெறாது சித்திக்காகவே அடையப்பட வேண்டும் என்றும் கருதுகின்றார். மேலும் சித்தி நிலையில் பரு உடல் ஒளி உடலாக மாற்றப்படுகின்ற பொழுது உயிருக்கும் உடலுக்கும் வேறுபாடு இருக்காது என்றும் குறிப்பிடுகின்றார். ஒளி உடம்பைப் பெற்ற பின்பு இறப்பினை வெற்றி கொள்வதும் நிலையான உடலில் இறை வாழ்க்கையை வாழ்வதும் இயலும். இந்நிலையையே இராமலிங்கர் மரணமில்லாப் பெருவாழ்வு என்கிறார்.

இராமலிங்கர் வீடுபேற்றில் முதல் இறுதி நிலைகளைக் குறிப்பிட்டாலும் அவை உண்மையில் நான்கு நிலைகளைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றை மனிதனின் நான்கு புருஷார்த்தங்கள் என்கிறார் இராமலிங்கர். முதல்நிலை தத்துவ நிக்கிரகம் எனப்படும். இது இருப்பின் கோட்பாடுகளான தத்துவங்களை வெற்றி கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவதாகும். இந்நிலை உயிரானது உணர்வற்ற வரம்புடைய துன்பத்திற்குக் காரணமான பரு உடலின் இயல்பைத்

தனது உண்மை இயல்பான கட்டுப்பாடற்ற மகிழ்ச்சியான உணர்வு நிலையிலிருந்து பிரித்து அறிகின்றதைக் குறிக்கும். இதன் விளைவாக உயிர் பருஉடலுடன் தவறாகத் தன்னை முற்றொருமைப்படுத்திக் கொண்ட நிலையிலிருந்து விடுபடும். இரண்டாவது நிலை இறைத் தன்மையை உணர்வதாகும். உயிரானது தனது உண்மையான இயல்பு இறைவனை ஒத்தது என்று உணர்ந்தவுடன் அது இறைத் தன்மை பெற்று விளங்கும். இதனையே பொதுவாக முக்தி என்கிறோம். இராமலிங்கரின் கருத்துப்படி முதல்நிலை எதிர்மறையாகவும் இரண்டாம் நிலை உடன்பாடாகவும் உள்ளது.

மூன்றாவது புருஷார்த்தத்தை மரணமில்லாப் பெருநிலை என்றும் நான்காவது புருஷார்த்தம் சக்திகளைப் பெறுவது என்றும் இராமலிங்கர் குறிப்பிடுகின்றார். மூன்றாவது நான்காவது புருஷார்த்தங்கள் இணைந்து சித்தி எனப்படுகின்றது. மரணமில்லாப் பெருவாழ்வு என்பது உடலுடன் இறவாத்தன்மையைப் பெறுவதைக் குறிக்கும். இந்நிலை மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி பரு உடலைத் தூய்மையான உடல் அல்லது சுத்த தேகமாக மாற்றுவது. இரண்டாவது பகுதி சுத்த தேகத்தை மந்திரவடிவு அல்லது பிரணவ தேகமாக மாற்றுவது. மூன்றாவது பகுதி மந்திர வடிவை அறிவு வடிவமாக அல்லது ஞான தேகமாக மாற்றுவது.

சுத்ததேகம் பொன்னுடல் அல்லது அன்புடல் எனவும் அறியப்படும். இந்நிலையில் பருநிலையான கூறுகள் அவற்றின் நுண்ணிய நிலைகளுக்கும் மாற்றப்படுகின்றன. இம்மாற்றம் பருஉடலின் நிலைகளான இறப்பு, பிணி, மூப்பு, பயம், துன்பம் ஆகியவற்றை வெற்றி கொள்ள வைத்து நுண்ணிய நிலையில் இயல் உலகில் உடலை வாழ வைக்கின்றது. இம்மாற்றத்தை இறைவன் தனது சாகாத்தலையைக் காண்பித்து நிகழ்த்துகின்றார். இதன் பொருள் உயிரானது தனது உண்மையான இயல்பை உணருகின்ற பொழுது இறைவன் இறவாமையைப் பற்றி உயிருக்கு அறிவுறுத்துதல் என்பதாகும்.

பிரணவ தேகம் கருணை உடல் எனவும் அழைக்கப்படும். இம்மாற்றம் சாதாரண நிலையில் நிகழும் சுவாசித்தலை நிலையான வாழ்க்கைக்காக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வதில் அடங்கும். சுவாசித்தல் ஆனது உடலுக்குள்ளேயே நிகழ ஆரம்பிக்கும். இம்மாற்றத்தை இறைவன் எரிவதற்குக் காரணமில்லாத எத்தகைய தடையுமற்ற தனது வேகாக்கால் எனப்படும் நிலையான காற்றைக் காண்பித்தலால் உண்டாக்குகிறார்.

ஞானதேகம் ஒளி உடம்பைக் குறிக்கும். இதுவே வெளி உடம்பு எனவும்படும். வெளியானது இறைத்தன்மையைக் குறியீடாகக் கொண்டது. எனவே வெளியுடம்பு புலக்காட்சிக்கு அப்பாற்பட்டது. இம்மாற்றத்தை இறைவன் தனது போகாப்புனல் எனப்படும் வற்றாத நீராகிய கருணைத் தேனை உயிருக்கு அளிப்பதன் வழி நிகழ்த்துகின்றார். இராமலிங்க அடிகள் உடலுடன் கூடிய இறவாத் தன்மையை இறைவனின் பரந்த ஒளியினால் அடைய முடியுமென்று வலியுறுத்துவதுடன் பரு உடலின் மூவகை மாற்றங்களின் பொழுது கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி ஆகிய உயர்நிலைச் சக்திகளைப் பெறலாம் என்றும் கூறுகின்றார். இவ் உயர்சித்திகளே இராமலிங்கர் குறிப்பிடும் நான்காவதும், இறுதியுமான புருஷார்த்தமாகும்.

கருமசித்தி பொதுவாக அனிமா, மகிமா, லகுவா, பரகாயப் பிரவேசம் போன்ற எண்வகை சித்திகளைக் குறிப்பிடும். கர்ம சித்திகளுக்குக் கால வரையறை உண்டு. இச்சித்திகள் ஒன்றரை மணி முதல் மூணேகால் மணி வரையிலும் அல்லது ஓர் ஆண்டு வரையிலும் தொடர்ந்திருக்கும்.

யோக சித்தி என்பது உயிரின் கட்டற்ற இயற்றி நிலையையும், 12 ஆண்டுகள் முதல் 108 ஆண்டுகள் வரையிலான கால வரை--யறையைக் கொண்டுள்ள அறுபத்து நான்கு சித்திகளைச் செய்வதைக் குறிப்பிடும். ஞானசித்தி என்பது இறைவனுடன் உணர்வு நிலையில் முற்றொருமை கொண்டு விளங்குவதாகும். இதுவே ஏனைய அனைத்து சக்திகளுக்கும் அடிப்படையானதால் இது மிக உயர்ந்த சக்தியாகும். இது எல்லாம் வல்ல சித்தியாகும். இதற்குக்கால வரையறை கிடையாது. இது உயிரானது தனது கட்டற்ற இயற்றி நிலையில் 64000 சக்திகளை இயக்கவோ, கட்டுப்படுத்தவோ கூடிய நிலையினையும், 688 கோடி மகா சித்திகளையும் செய்கின்ற வல்லமையைக் குறிப்பிடும்.

இராமலிங்கரின் மெய்ப்பொருளியல் கருத்துக்கள் அவர் குறிப்பிடுகின்ற புருஷார்த்தங்களையும் அவருடைய வாழ்க்கையில் அவர் அடைந்தவை என்பதை வெளிப்படுத்துகின்றன. மரணமில்லாப் பெருவாழ்வை அவர் காலத்திற்கு முன்பு திருமூலரும், ஞானசம்பந்தரும், மாணிக்கவாசகரும் பெற்றிருந்தமையைச் சில சான்றுகளில் குறிப்பிடலாம். மனிதன் அவனுடைய முடிவு பற்றிய இராமலிங்கரின் கருத்தமைவுகள் மனித இனத்திற்கு ஒரு பெருங்கொடையாகும். இக்கருத்தமைவுகளை அவற்றின் சரியான பொருளில் உலகிற்கு வெளிப்படுத்துவது கற்றறிந்த அனைவரது கடமையாகும்.

# இறையனார் அகப்பொருளின் உரை மரபு

மா. சியாமளாதேவி
மயிலாடுதுறை

## அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இறையனார் அகப்பொருளின் இடம் மிக இன்றியமையாத ஒன்று. மூல நூல் 60 நூற்பாக்களைக் கொண்டது. இந்நூல் இறைவனால் இயற்றப்பட்டு நக்கீரரால் உரை எழுதப்பட்டது என்று கருதப்படுகிறது. இவ்வுரை பலகாலும் வாய்மொழியாக வந்து இறுதியில் எழுத்து வடிவம் பெற்றது என்பர். நூல் என்றாலே தொல்காப்பியர் காலத்தில் இலக்கணத்தையே குறிக்கும். நூலுக்கு உரை எழுதும் முறை பற்றித் தொல்காப்பியரே கூறியுள்ளார். அடுத்து நாலடியாரில் உரை கூறும் மரபு விளக்கப்படுகிறது.

இன்று கிடைக்கும் உரைகளுள் பழமைவாய்ந்தது இறையனார் களவியல் உரையேயாகும். அவ்வுரையாசிரியர் நூற்பாவுக்குப் பொருள் கூறி விளக்கம் சொல்வதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் தம் காலத்தமிழ் இலக்கியச் செய்திகள் அனைத்தையுமே இவ்வுரையில் எடுத்துக் கூறியுள்ளார்.

## நூற்பாக்கள் விவரம்

தொல்காப்பியத்தில் அகத்திணையியல் (55), களவியல் (50), கற்பியல் (53), பொருளியல் (54) ஆகியவை முற்றாக (212 நூற்பாக்கள்) அகப்பொருள் பற்றியன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் ஆகியவற்றிலும் அகப்பொருள் செய்தியுண்டு. இவற்றுள் 55 நூற்பாக்களையுடைய அகத்திணையியலில் தனிச்சொல் நீங்கிய முற்றடிகள் மட்டும் 155. இறையனார் களவியல் முழுமையும் 60 நூற்பாக்களில் அடங்கி விடுகின்றது. அந்நூற்பாக்களின் அடிகளுள் முற்றடி 144, சிந்தடி 1, தனிச் சொல் 4 அவ்வளவே. இவற்றுள்ளும் 59 ஆம் நூற்பாவில் உள்ள பின் ஈரடிகள் (கிளந்தவல்ல... கொளலே) தொல்காப்பியத்தில் ஈரிடங்களில் வரும் (602, 781). இதனை நோக்கும் போது களவியலின் அளவுச் சுருக்கம் புலப்படும்.

களவியல் நூற்பாக்கள் அளவால் சுருங்கினும் செறிவு மிக்கவை, இயல்பான ஓட்டம் உடையவை, பொருள் விரிப்புக்கு வேண்டுமளவு இடம் தருபவை. நூற்பா இலக்கணங்கள் முற்றாக அமைந்த

சிறப்புடையவை. ஓரோர் அடியால் வரும் நூற்பாக்களே 15 உள்ளன. ஒரே ஒரு நூற்பா சிந்தடி ஒன்றாலேயே அமைந்துள்ளது (22). அம்பலாலும் அலரும் களவு என்பது அது. நூற்பாவுள் பேரளவு 10 அடி. அவ்வாறமைந்தது 12-ஆம் நூற்பா. நூற்பா சுருக்கமும் அமைதியும் உரைப் பெருக்கத்திற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளன. சிவஞான போதச் செறிவையும் களவியல் நூற்பாக்கள் நினைவுறுத்துகின்றன.

## உரை மரபுகள்

இவ்வுரையில் கூறப்படும் உரை மரபுகளாவன :

1. கருத்துக்களைக் கூறல்
2. பதப்பொருள் சொல்லுதல்
3. பொழிப்புக் கூறல்
4. உள்ளுறுத்தல்

### 1. கருத்துக்களைக் கூறல்

சில இடங்களில் நூற்பா நுவலும் பொருளை மிக விளக்கமாகக் கூறுவதும் காணப்படுகின்றன. "மேற்சூத்திரத்தினுள் அறத்தொடு நிற்கும் நிலை உணர்த்திப் போந்தார். இனி, அறத்தொடு நிற்கும் இடம் கூறுவான் எடுத்துக் கொண்டார் என்பது. அஃது உணர்த்துதல் நுதலிற்று" என்று நூற்பா தொடர்ச்சி உரைத்து. "மேற்சூத்திரத்தோடு இயைபு என்னையோ எனின், மேல் அறத்தொடு நிலையதிகாரம் வாரா நின்றதாகலான்" என்று இயைபு உரைக்கிறார். (ப. 139).

இவ்வாறாக ஒன்பது நூற்பாக்களுக்கு நுவல்பொருளையடுத்து (நூற். 1, 2, 6, 21, 25, 29, 30, 31, 42) இயைபு உரைக்கப்படக் காணலாம். கருத்துக்களைக் கூறல் என்ற பகுதியில்

1. நூற்பா நுவலும் பொருள்
2. இயைபு கூறல்
3. தொடர்ச்சி கூறல்
4. வகை கூறல்

என்னும் பகுப்பு முறைகளில் கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

### 2. பதப்பொருள் சொல்லுதல்

களவியலுரைகாரர் "கண்ணழித்தல்" என்பது பதப்பொருள் சொல்லுதல் என விளக்குகிறார். இது இன்று செய்யுளைப் பிரிப்பதைக் குறிக்கும் நூற்பாவினைப் பல பிரிவுகளாகப் பிரித்துப் பதப்பொருள் கூறும் முறையைக் களவியலுரையில் காணலாம்.

நூற்பாவைப் பிரித்து முழுவதும் ஓரிடத்திலேயே பொருள் கூறிவிட்டு, பின்னர் விளக்கவுரை கூறுகிறார். சில இடங்களில் ஒவ்வொரு தொடருக்கும் பொருளும் விளக்கவுரையும் கூறி, பின்னர் அடுத்த தொடருக்குப் பொருளும் விளக்கவுரையும் கூறக் காணலாம். புகழும் கொடுமையும் கிழவோன்மேன என்ற நூற்பாவிற்கு, கண்ணழித்துக் கூறும் உரைகாரர் இதன் பொருள் என்று தொடங்கி, புகழும் கொடுமையும் என்பது புகழ் என்பது தக்கான் எனப்படுதல். கொடுமை என்பது தகான் எனப்படுதல் என்றவாறு கிழவோன் மேன என்பது - அவை இரண்டும் தலைமகன் கண்ண என்றவாறு என்று விளக்குகிறார் (நூற்.15)

இவ்வாறு கண்ணழித்து உரை கூறும் போது நூற்பாவை மொழி மாற்றிக்கொள்க எனக்கூறி, மொழி மாற்றிப் பொருளுரைப்பதுண்டு (நூற். 15, 18, 23). அவ்வாறு மொழி மாற்றி உரைப்பதற்குக் காரணமும் நூற்பா அமைந்துள்ள தன்மைக்கும் காரணமும் விளக்கப்படுவதுண்டு (நூற். 18). பதப்பொருளைக் கூறும் போது சொற்பொருளைத் தந்து செல்லாமல் விளக்கம்தந்து செல்வதைக் காணலாம்.

பணிந்த மொழியசல் என்பதற்கு, பதப்பொருளாக இழிந்த சொற்களான் (நூற். 5) என்று விளக்கம் கூறுகிறார். தோழி என்பதற்குப் பொருள் கூறும் போது தோழி எனப்படுவதால் செவிலித்தாய் மகள் என்று பொருள் கூறி, சான்றாகத் தொல்காப்பியரைக் காட்டுவதும் பதப்பொருள் கூறுவதிலேயே அமைந்துள்ளது (ப. 65).

தனித்தனியே தொடர் விளக்கம் கூறல் (நூற். 24)

ஓரிடத்தே நூற்பா பொருள் கூறல் (நூற். 25)

இரண்டு விதமாகவும் ஒரு நூற்பாவுக்கு உரை கூறல் (நூற். 29)

என்று பதப்பொருள் கூறும் போது மூன்று விதப் பொருள் கூறும் நிலையும் காணப்படுகிறது (ப. 85).

அறம் என்ப்து தக்கது (ப. 131).

பரம் என்பது புறம். அஃது ஆரியச் சொல் (ப. 158)

கற்பு என்பது பூப்பு (ப. 181)

துறவு என்பது நீக்கம். பிரிவு. அகற்சி (ப. 157)

உம்மை. முற்றும்மை(ப. 164)

இவ்வாறாக இப்பகுதியுள் நூற்பாவைப் பிரித்தல், பிரித்த தொடருக்குப் பொருள் உரைத்தல், நூற்பாவை மொழி மாற்றி

உரைத்தல், விளக்கமாக உரைதரல், ஒரே தொடருக்கு மூன்று பொருள் தருவது, தனிச்சொற்களுக்குப் பொருள் தருவது எனும் நிலையில் செய்திகள் தரப்பட்டுள்ளன.

## 3. பொழிப்புக் கூறல்

பொழிப்புக் கூறல் பற்றி உரையில் கூறினாலும் (ப.15) அதற்கு விளக்கம் தரவில்லை. ஒவ்வொரு நூற்பாவிற்கும் திரண்ட பொருளைத் தரக் காணலாம். எல்லா நூற்பாவிற்கும் பொழிப்பு தரப்படவில்லை.

## 4. உள்ளுறுத்தல்

சூத்திரத்துப் பொருளைத் தூய்மை செய்ததற்குக் கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரை எனக்கொள்க (ப. 15) என்று இதனை விளக்குகிறார் அகப்பொருளுரையாசிரியர்.

இப்பகுதியில் நூற்பாவுக்கு விளக்கம் கூறல், இலக்கியச் சான்றுகளைக் கூறுதல், இலக்கணக் குறிப்பு கூறுதல், இலக்கண உத்திகளைப் பயன்படுத்துதல், பிறர் உரை கூறல், அதனை மறுத்தல், பலஉரை கூறுதல், இலக்கிய மரபுகளை நிலைநாட்டுதல் போன்ற மரபுகள் அமைந்துள்ளன.

## தொகுப்புரை

இறையனார் அகப்பொருளுரை பாயிரம் என்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் முச்சங்க வரலாறு, களவியல் வரலாறு, நூல் பற்றிய செய்திகள், ஐந்திணை பற்றிய செய்திகள் ஆகியவற்றை மிக விரிவாக உரைப்பது குறிக்கத்தக்கது.

பல வகையில் இறையனார் களவியல் உரை தமிழ் இலக்கிய உலகில் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழில் எழுந்த முதல் உரையாக அமைந்து பல்வேறு பழைய மரபுகளை விளக்கி, புதிய மரபுகளை ஏற்படுத்தித் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், அகப்பொருள் வரலாற்றிலும் தனக்கெனத் தனியான ஓர் இடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூல நூலை விட உரையே சிறப்புற்ற ஒரு சில நூல்களுள் இறையனார் அகப்பொருள் உரையும் ஒன்று. சுருங்கச் சொல்லி விளக்கவைத்தல் என்னும் உத்தியில் இறையனார் அகப்பொருள் உரை மிளிர்கிறது என்பதை இவ்வாய்வு கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 April 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.